## தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் பேரவை – 2017

தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் பேரவையின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) அதிகாரச் சட்டத்தின் 7(1) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(6) பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கை திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதும் மீளாய்வாண்டின் பேரவையின் செயலாற்றல் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2006 இன் 21 தனியார் மருத்துவ நிலையங்களை பதிவு செய்யும் சட்டத்தின் 7(1) உப பிரிவின் பிரகாரம் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் பேரவை கூட்டிணைக்கப்பட்ட பேரவையொன்றாக இருக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் இச்சபைக்கும் செல்லுபடியாகுவதால் அச்சட்டத்தின் 13(6) ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் பேரவையினால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கை திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் இருப்பு

பேரவையினால் இறுதியாக தயாரிக்கப்பட்டிருந்த 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காணப்படும் சொத்துக்கள், பொறுப்புக்கள், உரித்துக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **சொத்துக்கள்** | **பெறுமதி** |
|---|---|
| | ரூபா |
| நடைமுறையல்லாத சொத்துக்கள் | 26,787,266 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 17,424,501 |
| மொத்தச் சொத்துக்கள் | 44,211,767 |

| | |
|---|---:|
| நடைமுறையல்லாத பொறுப்புக்கள் | - |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 21,688,895 |
| | --------------- |
| மொத்தப் பொறுப்புக்கள் | 21,688,895 |
| தேறிய சொத்துக்கள் / உரிமை | 22,522,872 |
| மொத்தம் | ---------------- |
| | 44,211,767 |
| | ======= |
| மொத்த வருமானம் | 18,056,343 |
| மொத்தச் செலவினம் | (19,995,419) |
| பற்றாக்குறை | ---------------- |
| | (1,939,076) |
| | ======= |

**2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

---

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 10,040,000 தொகையான திறைசேரி உண்டியல்களின் சான்றிதழ்கள் மற்றும் 2008 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை மீதியை உறுதிப்படுத்தும் கடிதங்கள் இவ்வறிக்கை திகதி வரை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

---

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு | அமைச்சிற்கு பொறுப்பான அமைச்சரினதும் நிதி அமைச்சரினதும் உரிய அங்கீகாரமும் பெற்றுக் கொள்ளப்படாது பேரவையால் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 35,085,716 தொகை நிலையான வைப்புக்களிலும் ரூபா 10,000,000 தொகை திறைசேரி உண்டியல்களிலும் முதலீடு செய்யப்பட்டிருந்தன. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப்பிரமாணம் 225(4) | கொடுப்பனவு உறுதிச்சீட்டு தயாரிக்கப்படுகின்ற அல்லது அவற்றில் சரி பிழை பார்க்கப்படுகின்ற அல்லது கீழ் உத்தியோகத்தர்களால் அவற்றில் சுருக்க கையொப்பமிடுவதற்கான இடம் வைக்கப்பட்டுள்ள இடங்களில் தனது சிற்றொப்பத்தை இட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 992,793 ஆன உறுதிச்சீட்டுக்களில் சிற்றொப்பம் இடம்பெற்றிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 231(1) | இயலுமான வகையில் ஏனைய பதிவேடொன்றை பார்க்காமல் சரி பிழை பார்க்கும் பொருட்டு ஒவ்வொரு சேவை தொடர்பாகவும் திகதி, எண்ணிக்கை, அளவு தூரம், கட்டணம் செலவு போன்ற முழுமையான விபரங்கள் சகல உறுதிச்சீட்டுக்களிலும் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 336,177 ஆன சில்லறைக் காசேட்டினை மீள்நிரப்பும் போது செலவினங்கள் உறுதிப்படுத்தும் பட்டியல் மற்றும் பற்றுச்சீட்டுக்கள் உறுதிச்சீட்டுடன் இணைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 245(1) | உறுதிப்படுத்தும் உத்தியோகத்தர்கள் உறுதிச்சீட்டுக்கள் சான்றுறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 619,277 ஆன உறுதிச் சீட்டுக்கள் சான்றுறுதிப்படுத்தாமல் கொடுப்பனவு செய்திருந்தது. |
| (iv) | நிதிப்பிரமாணம் 262(2) | கொடுப்பனவு செய்யப்பட்ட சகல உறுதிச் சீட்டுக்களிலும் அவற்றை ஆதாரப்படுத்தும் ஆவணங்களிலும் கொடுப்பனவு செய்யப்பட்டது முத்திரை இடப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 20,372,698 ஆன உறுதிச்சீட்டுக்களில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (v) | நிதிப்பிரமாணம் 384(3) | கிடைக்கப்பெறும் ஒவ்வொரு காசோலைப் புத்தகம் தொடர்பாகவும் உப அட்டவணை புத்தகங்கள் பதிவேடொன்றில் பதிவுசெய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் அவ்வாறான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | நிதிப் பிரமாணம் 395 | ஒவ்வொரு மாத இறுதியிலும் உள்ள கொடுக்கல் வாங்கல்களின் நிலைமை தொடர்பாக அடுத்தவரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் பேரவையால் மீளாய்வாண்டிற்கான மாதாந்தம் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (vii) | நிதிப் பிரமாணம் 431(3) | பிணை முறிகளில் சகல விபரங்களும் அதாவது அதாவது பெறுமதி, கொள்விலை, விற்பனையால் கிடைத்த பணம், பெறுபேறுகள், நட்டம், பங்கிலாபம் கிடைத்த திகதி முதலீடு பதிவேட்டில் அறிக்கையிட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முதலீட்டு பதிவேடு ஒன்று பேணப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனி மற்றும் மென்பொருட்களுக்காக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2017 நவம்பர் 02 ஆம் திகதிய 04/2017 ஆம் இலக்க திறைசேரிச் செயற்பாட்டுச் சுற்றறிக்கை | 2017 ஆம் ஆண்டில் காசேடு தீர்வுசெய்து தமது பெயர், கையொப்பம், பதவி, திகதி மற்றும் நேரத்துடன் குறிப்பொன்று இடப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அவ்வாறு காசேடு தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### 3.1.1 திட்டமிடல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் தொலைநோக்கு மற்றும் செயற்பணி என்பவற்றை நிறைவேற்றுவதற்காக 03 ஆண்டுகளுக்கு குறையாத காலமொன்றுக்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், பேரவையினால் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.1.2 செயற்பாடும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பேரவையினால் மீளாய்வாண்டிற்காக செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்படாமல் இருந்தமையால் சபையின் செயலாற்றல் தொடர்பாக கருத்தினை சமர்ப்பிக்கமுடியவில்லை. பேரவை ஆரம்பிக்கப்பட்ட 2007 ஆம் ஆண்டின் போது பதிவு செய்யப்பட்டிருந்த தனியார் மருத்துவ நிலையங்களின் எண்ணிக்கை 1,747 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை அந்த எண்ணிக்கை 712 வரை அதாவது 59 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. இவ்வாறு பதிவு குறைவடைவதற்கான காரணம் அந்த தனியார் மருத்துவ நிலையங்கள் மூடப்படுவதும் இல்லாவிட்டால் பதிவினை பெற்றுக் கொள்ளாமலே நிறுவனத்தை நடாத்திச் செல்வது தொடர்பாக பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 இன் 21 தனியார் மருத்துவ நிலையங்களை (பதிவு செய்யும்) சட்டத்தின் 2(1) உப பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அனைத்து தனியார் மருத்துவ நிலையங்களும் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பதிவு செய்யப்பட்டிருந்த தனியார் மருத்துவ நிலையங்களின் எண்ணிக்கை 712 ஆக இருந்தது. எவ்வாறாயினும் பதிவு செய்யப்பட வேண்டிய தனியார் மருத்துவ நிலையங்களை இனங்காண்பதற்கும் பதிவு செய்வதற்கும் பதிவு செய்யாத நிறுவனங்கள் தொடர்பாக சட்டத்தின் 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் செயற்படுத்துவதற்கு முறையான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2006 இன் 21 தனியார் மருத்துவ நிலையங்களை பதிவு செய்யும் சட்டத்தின் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ள கீழே காட்டப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக முறையான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்துவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தவறியிருந்தது.

(i) பதிவு செய்யப்பட்ட தனியார் மருத்துவ நிறுவகங்களால் பேணப்பட வேண்டிய நியமங்களை அபிவிருத்தி செய்து கண்காணித்தல்

(ii) சகல தனியார் மருத்துவ நிலையங்களாலும் பதவியணியைச் சேர்க்கும் போது ஆகக் குறைந்த தகைமைகள் பின்பற்றப்பட வேண்டும் என்பதை உறுதிப்படுத்தி பதவியணியை பயிற்றுவிக்கையில் ஆகக் குறைந்த தரங்கள் பேணப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ளல்.

(iii) அந்த தனியார் மருத்துவ நிலையங்களால் வழங்கப்பட்டு வரும் அல்லது வழங்கப்படும் நோயாளிகளைப் பேணும் சேவைகளின் தரத்தை உறுதிப்படுத்தல்.

(ஈ) 13(1) பிரிவின் பிரகாரம் சபையின் ஆலோசனையின் பேரில் வர்த்தமானியில் வெளியிடப்படும் நியதிகள் மூலம் அமைச்சரால் தனியார் மருத்துவ நிறுவகங்களிற்காக தரப்படுத்தும் உத்தேச முறையொன்றை படிப்படியாக குறிப்பிட்டு செயற்படுத்தப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) 18(2) பிரிவின் (அ) பந்தியின் பிரகாரம் தனியார் மருத்துவ நிலையங்களை பதிவு செய்யும் போதும் பதிவினை புதுப்பிக்கும் போதும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்களால் இணங்க செயற்பட வேண்டிய மதியுரைகள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

(ஊ) 18(2) பிரிவின் (எ) பந்தியின் பிரகாரம் தொடர்புறும் தரப்பினர் தெரிவிக்கும் அல்லது அதிருப்திக்குட்பட்ட நபரொருவரினால் ஏதேனும் தனியார் மருத்துவ நிலையமொன்றுக்கோ அதனுடன் தொடர்புடைய நபரொருவருக்கு எதிராக செய்யப்படும் முறைப்பாடொன்று பொறுப்பேற்கப்படும் போதும் அம்முறைப்பாட்டினை இறுதியாக முடிவுறுத்தும் போதும் பின்பற்றப்பட வேண்டிய செயற்பாட்டுக் கோவையோ நியதிகள் தொடர்பான கட்டளைகள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 யூன் 11 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் பேரவையினால் சேகரிக்கப்படும் வருடாந்த பதிவுக் கட்டணத்தில் 50 சதவீதம் மாகாண சபைகளுக்கு வழங்குவதற்கு முன்னர் மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளரால் தனியார் சுகாதார துறை அபிவிருத்திக்குரிய வருடாந்த பாதீட்டு மதிப்பீடொன்றுடன் வருடாந்த முன்மொழிவொன்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனவும் ஆண்டின் இறுதியில் செலவினம் மற்றும் செயற்பாடுகள் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்ற ஏற்பாடுகள் உள்ளடக்கி 2006 இன் 21 தனியார் மருத்துவ நிலையங்களை (பதிவு செய்யும்) சட்டத்தின் 3(5) ஆம் பிரிவினை திருத்தம் செய்வதற்கு 2015 யூலை 09 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்து 03 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், அதிகாரச்சட்டம் திருத்தம் செய்யப்படாமல் இருந்ததுடன் வருடாந்த பதிவுக் கட்டண வருமானத்தில் 50 மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) மருத்துவ நிலையங்கள் பதிவு செய்யப்பட வேண்டிய குறிப்பிட்ட காலப்பகுதியில் சட்டத்தில் அல்லது வழிகாட்டல் கோவையின் மூலம் குறிப்பிடாததன் காரணமாக மருத்துவ நிறுவனங்களின் பதிவிற்காக எந்தவொரு தினத்திலும் பணம் கிடைத்ததன் பின்னர் உரிய ஆண்டிற்காக பதிவுச் சான்றிதழ் வழங்குதல் இடம்பெற்றிருந்ததுடன் தண்டப்பணமொன்று அறவிடப்படாமை காரணமாக ஆண்டில் பேரைவக்கு கிடைக்கவேண்டிய வருமானம் தாமதமாக கிடைத்திருந்தது.

(இ) 2008 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அரைப்பகுதி சாதாரண மருந்தகங்களிலிருந்து மாத்திரம் பேரவைக்கு கிடைக்க வேண்டிய நிலுவை பதிவுக் கட்டண வருமானம் ரூபா 700,000 என தெரிவு பரிசோதனையின் போது கண்டறியப்பட்டதுடன் பேரவைக்கு சொந்தமான நிலுவை வருமானங்களை இனங்காணும் நடைமுறையொன்று காணப்படவில்லை.

### 3.3 பதவியணியினர் நிர்வாகம்

பேரவை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை நிறுவனத்தின் செயற்பாடுகள் மற்றும் போதுமானதன்மை இனங்காணப்பட்டு அதற்கு ஈடாகும் வகையில் பதவியணியினரை அங்கீகரித்துக் கொள்வதற்கும் ஆட்சேர்ப்பு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இல்லாமல் கணக்காளர், செயற்பாட்டு முகாமையாளர் மற்றும் 4 உதவியாளர்கள் உட்பட 09 பேர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர்.

## 4 நிலைபேறான அபிவிருத்தி

### 4.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ‘‘நிகழ்ச்சிநிரலின்’’ பிரகாரம், ஒவ்வொரு அரச நிறுவனத்தினாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருப்பதுடன். மீளாய்வாண்டிற்கு உரித்தாக தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் பேரவை தமது விடயப் பரப்பின் கீழ் எடுக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பாக எவ்வாறு செயற்படுத்துவது தொடர்பாக அறிந்திருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 133 இன் பிரகாரம் மீளாய்வாண்டில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை

### 5.2 பெறுகை மற்றும் ஒப்பந்த செயற்பாடு

#### 5.2.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பேரவையினால் பேரவையில் புதிதாக பதிவு செய்யப்படும் சகல தனியார் மருத்துவ நிறுவனங்களில் காட்சிப்படுத்துவதற்காக புதிய பெயர் பலகையொன்று வழங்கப்பட்டிருந்ததுடன், 2011 நவம்பர் 03 ஆந் திகதியின் பின்னர் 2013 நவம்பர்

03 ஆந் திகதியின் பின்னர் 2013 ஒக்தோபர் இரண்டாவது தடவை கேள்வி கோரி ஆகக்குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த முதலாவது ஒப்பந்தக்காரருக்கு 2013 ஒக்தோபர 22 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டில் அதே ஒப்பந்தக்காரருக்கே மீண்டும் கட்டளையிட்டு ரூபா 609,500 ஆன முழுத்தொகையையும் செலுத்தி 246 பெயர் பலகைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.6.1 ஆம் பந்தியின் பிரகாரம் முதலாவது ஒப்பந்தம் வழங்கும் திகதி முதல் 6 மாத காலம் கழியாதிருக்கையில் ஒப்பந்தப் பெறுமதியில் 50 சதவீதமான எல்லை வரை மாத்திரம் பொருட்கள் கொள்வனவிற்காக மீண்டும் கட்டளையிட முடியும். எனினும் அந்த இரண்டு வரையறைகளையும் மீறி முதலாவது ஒப்பந்தத்தை வழங்கிய திகதியான 2013 ஒக்தோபர் முதல் 6 மாத காலம் கடந்ததன் பின்னர் மீளாய்வாண்டில் 03 சந்தர்ப்பங்களில் மீண்டும் கூறுவிலை கோராமல் அதே வழங்குனரிடமிருந்து மீண்டும் கட்டளையிட்டு ஒன்று ரூபா 2,400 வீதம் சிறிய அளவிலான 226 பெயர்ப் பலகைகளும், ஒன்று ரூபா 2,900 வீதம் நடுத்தர அளவிலான 6 பெயர்ப் பலகைகளும் ரூபா 3,550 வீதம் 14 பெரிய பெயர்பலகைகளையும் கொள்வனவு செய்வதற்கு ரூபா 609,500 செலவு செய்யப்பட்டிருந்தன.

(இ) வருடாந்தம் பதிவினை புதுப்பிக்கும் போது பதிவில் புதிய ஆண்டினைக் குறிப்பிட்டு பழைய பெயர் பலகைகளுக்கு புதிய பகுதியொன்றை இணைத்து பெயர் பலகைகளை மீண்டும் தயாரிப்பதற்கு (Refill) நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் 11 சந்தர்ப்பங்களில் 982 பெயர் பலகைகளை மீண்டும் தயாரிப்பதற்காக (Refill) ரூபா 919,820 தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வருடாந்த பதிவினை புதுப்பித்திருந்த தனியார் மருத்துவ நிறுவனங்களின் பழைய பெயர் பலகைகளை மீண்டும் தயாரிப்பதற்காக (Refill) புதிய பெயர் பலகைகளை வழங்கிய வழங்குனரால் 2 சந்தர்ப்பங்களில் கீழே விபரிக்கப்பட்ட வகையில் கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்டிந்தன.

| **பெயர் பலகை வகை** | **2012 யூன் 07 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலை** | **2012 யூன் 28 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலை** |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| பெரிய | 1,250 | 1,050 |
| நடுத்தரம் | 990 | 900 |
| சிறிய | 850 | 820 |

எனினும் ஏனைய நிறுவனங்களிலிருந்து இதற்காக கேள்வி கோரப்பட்டமைக்காக அல்லது கூறு விலை சமர்ப்பிக்கப்பட்டதை உறுதிப்படுத்த எழுத்துமூல சான்றுகள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.6.1 ஆம் பந்தியின் பிரகாரம் முதலாவது ஒப்பந்தம் வழங்கும் திகதி முதல் 6 மாத காலம் கழியாதிருக்கையில் ஒப்பந்தப் பெறுமதியில் 50 சதவீதமான எல்லை வரை மாத்திரம் பொருட்கள் கொள்வனவிற்காக மீண்டும் கட்டளையிட இயலுமை காணப்படுகின்றது. எனினும் அந்த இரண்டு வரையறைகளையும் மீறி முதலாவது ஒப்பந்தத்தை வழங்கிய திகதியான 2013 யூன் முதல் 6 மாத காலம் கடந்ததன் பின்னர் மீளாய்வாண்டில் 11 சந்தர்ப்பங்களில் மீண்டும் கூறுவிலை கோராமல் அதே வழங்குனருக்கு மீண்டும் கட்டளையிட்டு ஒன்று ரூபா 850 வீதம் சிறிய அளவிலான 621 பெயர்ப் பலகைகளையும், ஒன்று

ரூபா 990 வீதம் நடுத்தர அளவிலான 228 பெயர்ப் பலகைகளையும் ரூபா 1,250 வீதம் 133 பெரிய பெயர் பலகைகளையும் மீண்டும் தயாரிப்பதற்கு ரூபா 919,820 செலவு செய்யப்பட்டிருந்தன.

(iii) 2012 யூன் 28 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட ஆகக் குறைந்த கூறுவிலையின் கீழ் பெயர் பலகைகள் புதுப்பித்தல்கள் இடம்பெறாதிருந்ததுடன், 11 சந்தர்ப்பங்களில் கூடிய கேள்வியின் கீழ் மாத்திரம் பெயர் பலகைகள் புதுப்பிக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் அதன் பிரகாரம் ஒன்று ரூபா 30 வீதம் 621 சிறிய பெயர் பலகைகளுக்காக ரூபா 18,630 தொகையும் ஒன்று ரூபா 90 வீதம் 228 நடுத்தர பெயர் பலகைகளுக்காக ரூபா 20,520 தொகையும் ஒன்று ரூபா 200 வீதம் 133 பெரிய பெயர் பலகைகளுக்காக ரூபா 26,600 தொகையுமாக மொத்தம் 982 பெயர் பலகைகளுக்காக ரூபா 65,750 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

## 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.1 ஆம் பிரிவின் பிரகாரம், பாதீடு ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) பதவியணியினர் நிர்வாகம் | நிறுவனத்தின் செயற்பாடுகள் மற்றும் போதுமானதன்மை இனங்காணப்பட்டு அதற்கு ஈடாகும் வகையில் பதவியணியினரை அங்கீகரித்துக் கொள்வதற்கும் ஆட்சேர்ப்பு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதிக் கட்டுப்பாடு | (i) வங்கிக் கணக்கிணக்கம் உரிய வேலையில் தயாரிக்கப்படாமை மற்றும் சரியாக தயாரிக்கப்படாமை. |
| | (ii) நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிராமை, காசேடு முறையாகப் பேணப்படாமை |
| | (iii) திறைசேரி உண்டியல்கள் மற்றும் ஏனைய முதலீடுகள் தொடர்பாக முறையான பதிவேடொன்று பேணப்படாமை |
| (இ) கணக்கீடு | சில கொடுக்கல் வாங்கல்களுக்காக கணக்கீட்டு எண்ணக்கருவின் பிரகாரம் தேவையான இரட்டைப் பதிவு சரியாக இடப்படாமை. |